## கோவித் 19: சுய தனிமைப்படுத்தலுக்கான வழிமுறைகள்

## பாதிக்கப்பட்ட ஒருவருடன் (SARS-CoV-2 உள்ளவருடன்) நீங்கள் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தால் அல்லது நோய்த்தொற்று அதிகமாக உள்ள ஒரு நாடு அல்லது பிரதேசத்திலிருந்து சுவிட்சர்லாந்திற்குள் நுழைந்த பிறகு என்ன செய்ய வேண்டும்

## புதுப்பிக்கப்பட்ட தகவல்கள் 04.12.2020

| | |
|---|---|
| **புதிய கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்ட ஒரு நபருடன் நெருங்கிய தொடர்பில் இருந்துள்ளீர்கள்** மற்றும் அவர்களின் நோய் ஒரு ஆய்வகத்தில் உறுதி செய்யப்பட்டது . ) நெருக்கமான தொடர்பு என்பது நீங்கள் பாதிக்கப்பட்ட நபருடன் 1.5 மீட்டருக்கும் குறைவாக 15 (நிமிடங்களுக்கும் மேலாக (ஒருவர் அல்லது இருவரும் முககவசம் இல்லாது அல்லது பலகம் போன்ற தடை இல்லாமல்) இருந்திருக்கிறீர்கள் என்பதாகும் . இந்த நபர் ஒரே நேரத்தில் தொற்றுநோய் பரப்பி இருந்தால்[1] 10நாட்களுக்கு வீட்டிலே சுய தனிமைப்படுத்தலுக்கு உள்ளாக வேண்டும் | நெருங்கிய தொடர்பு |
| **நீங்கள் கடந்த 10 நாட்களாக தொற்று அபாயம் உள்ள ஒரு நாடு அல்லது பகுதியில் இருந்து தற்போது சுவிட்சர்லாந்திற்குப் பயணிக்கிறீர்கள் .** நாட்டிற்குள் நுழைந்தவுடன் நேராக உங்கள் வீட்டிற்கு அல்லது பொருத்தமான தங்கும் விடுதிகளுக்கு செல்ல நீங்கள் கடமைப்பட்டுள்ளீர்கள். 10 நாட்கள் தொடர்ந்து நிரந்தரமாக அந்த விடுதியில் வசிக்க வேண்டும் (தனிமைப்படுத்தல்) மற்றும் இரண்டு நாட்களுக்குள் உங்களது கன்டோனல் அதிகாரத்தை தொடர்பு கொள்ள வேண்டும் (கன்டோனல் அதிகாரிகளின் தொடர்பு பட்டியலைப் பின்வரும் இணைப்பில் www.bag.admin.ch/entry )[2] காண்க). இந்த அதிகாரத்தின் வழிமுறைகளைப் பின்பற்றவும். தனிமைப்படுத்தலின் செலவுகளை பயணியாளர்களே ஏற்க வேண்டும். | உள்ளே பயணித்தல் |

சுய தனிமைப்படுத்தல் உங்கள் வீட்டிலுள்ளவர்களுக்கும் பொது மக்களுக்கும் வைரஸ் பரவாமல் இருக்க அதிகம் உதவும். இந்த நேரத்தில் உங்களுக்கும் நோய் தொற்றலாம். சுய தனிமைப்படுத்தலூடாக, குறிப்பாக ஆபத்துக்குரிய மக்களைப்[3] பாதுகாப்பதற்கும் வைரஸின் பரவலைக் குறைப்பதற்கும் நீங்கள் ஒரு முக்கிய பங்களிப்பைச் செய்கிறீர்கள்.

புதிய கொரோனா வைரஸ்

வைரஸ் பரவுவதைத் தவிர்ப்பதற்கு சுய தனிமைப்படுத்தலின் போது என்ன நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்பதை பின்வரும் வழிமுறைகள் உங்களுக்குக் எடுத்துரைக்கும்.புதிய கொரோனா வைரஸ் பற்றிய அனைத்து முக்கிய தகவல்களையும் சுவிஸ் கூட்டமைப்பு சுகாதாரப்பிரிவின் (BAG) இணையதளத்தில் காணலாம்: http://www.bag.admin.ch/neues-coronavirus. (ஜெர்மன், பிரஞ்சு, இத்தாலி மற்றும் ஆங்கிலத்தில்).

உங்கள் மொழியில் அமைந்த தகவலட்டையை www.bag.admin.ch/neues-coronavirus-downloads இல் பெற்றுக்கொள்ளலாம்.

**<u>சுய தனிமைப்படுத்தலுக்கு எடுக்கும் காலம்</u>**

- சுய தனிமைப்படுத்தலுக்கான கால எல்லை 10 நாட்களாகும்.
- தொற்றுதளுக்குள்ளாகிய நபருடன் உங்களுக்கு ஏற்பட்ட தொடர்பின் இறுதி நாளிலிருந்து மேற்படி 10 நாட்கள் தொடங்குகின்றது.

---

[1] ஒரு நபர் அறிகுறிகளைக் கொண்டிருக்கும் போதும், இந்த அறிகுறிகள் தோன்றுவதற்கு 48 மணி நேரத்திற்கு முன்பும் தொற்றுநோயை பரப்பலாம்.

2 நீங்கள் தொற்றிப்பரவக்கூடிய அதிக ஆபத்தின்றிய ஒரு நாடிலிருந்து அல்லது பிரதேசத்திலிருந்து இன் நாட்டினுள் பிரயாணிக்கும் பொழுது, எவ்வளவு காலம் மேற்படி நாடில் அல்லது பிரதேசத்தில் தங்கியிருந்தீர்கள் என்பதையிட்டு சுய தனிமைப்படுத்தலுக்கான கால எல்லையை மாநில அதிகாரிகள் கணிப்பிட முடியும்.

3 முதியோர்கள் மற்றும் கர்ப்பிணிப் பெண்கள், உயர் இரத்த அழுத்தம், நீரிழிவு நோய், இருதய நோய்கள், சுவாச நோய்கள், புற்றுநோய் அல்லது நோயெதிர்ப்பு மண்டலத்தை பலவீனப்படுத்தும் நோய்கள் / சிகிச்சைகள், உடல் பருமன் தரம் III (morbid, BMI ≥40 கிலோ / m2)

- ***பிரயாண சுய தனிமைப்படுத்தலுக்கான*** *10 நாட்கள் நீங்கள் நாடினுள் பிரயாணித்த தினத்திலிருந்து தொடங்குகின்றது. நீங்கள் தொற்றிப்பரவக்கூடிய அதிக ஆபத்தின்றிய ஒரு நாடிலிருந்து அல்லது பிரதேசத்திலிருந்து இந்த நாட்டினுள் பிரயாணிக்கும் பொழுது, எவ்வளவு காலம் மேற்படி நாடில் அல்லது பிரதேசத்தில் தங்கியிருந்தீர்கள் என்பதையிட்டு சுய தனிமைப்படுத்தலுக்கான கால எல்லையை மாநில அதிகாரிகள் கணிப்பிட முடியும்.*
- *உங்களுக்கு நோய் அறிகுறிகள் எதுவும் 10 நாட்களுக்குப் பின் இல்லாதிருப்பின், சுய தனிமைப்படுத்தலை முடிவுக்கு கொண்டு வரலாம்.*

### ***சமூகம் மற்றும் தொழிலில் இருந்து பிரிந்திருத்தல்***

*சுகாதார மற்றும் நடத்தை விதிகள்*

- *மற்றவர்களுடன் எந்த தொடர்பையும் தவிர்க்கவும். இததிலிருந்து சுய தனிமைப்படுத்தப்பட்டவர்கள் மற்றும் உங்களுடன் ஒரே வீட்டில் வசிப்பவர்களுக்கு விதிவிலக்களிக்கப்பட்டுள்ளது. தொற்றுள்ள நபரொரருவருடன் தொடர்ந்தும் தொடர்பைப் பேணும் பட்சத்தில், சுய தனிமைப்படுத்தல் பின்னோக்கி நீடிக்கப்படுகின்றது என்பதைக் கவனத்தில் கொள்ளுங்கள்; அறிகுறிகள் ஏற்ட்படுகின்றன மற்றும் பரிசோதனை தொடரை உறுதிப்படுத்துகின்றது.*
- *"இவ்வாறு எம்மை நாம் பாதுகாத்துக்கொள்ளலாம்" நடவடிக்கைகளின் சுகாதார விதிகள் மற்றும் நடத்தை பரிந்துரைகளை பின்பற்றவும்:* http://www.bag.admin.ch/so-schuetzen-wir-uns.
- *எதிர்மறையான சோதனையின் முடிவு (பீ சீ ஆர் அல்லது எதிர்மரபணு/விரைவு சோதனை) சுய தனிமைப்படுத்தலின் காலத்தை (10 நாட்கள்) குறைக்காது.*

### ***நீங்கள் பொசிடிவ் என சோதனியில் உறுதிப்படுத்தப்பட்ட நபருடன் ஒரே வீட்டில் வசித்துவந்தால்***

*தனிமைப்படுத்தல் பரிந்துரை*

- ***பொசிடிவ் என சோதனியில் உறுதிப்படுத்தப்பட்ட நபர்*** *கதவுகளை மூடக்கூடிய அறையை தயார் படுத்தி இருந்து கொள்ள வேண்டும், அத்துடன் அவர் இந்த அறையில் உணவை எடுத்துக்கொள்ள வேண்டும் (சுய தனிமைக்குரிய அறிவுறுத்தல்களை* www.bag.admin.ch/isolation-und-quarantaene *பார்க்கவும்).*
- *உங்கள் அறையை விட்டு வெளியேற வேண்டியிருந்தால், பொசிடிவ் என சோதனையில்* ***உறுதிப்படுத்தப்பட்ட*** *நபரிடமிருந்து 1.5 மீட்டர் தூர இடைவெளியை வைத்திருப்பதுடன் முககவசம் ஒன்றை அணியுங்கள்.*
- *எல்லா அறைகளையும் ஒழுங்கான நேர இடைவெளியில் காற்றோட்டம் செய்யுங்கள்.*
- *எவ்விதமான சந்திப்புகள் மற்றும் தொடர்புகளைத் தவிர்க்கவும்.*
- *மளிகை பொருட்கள், மருந்துகள் மற்றும் பிற இன்றியமையாத பொருட்களை குடும்பத்தினர், நண்பர்கள் அல்லது விநியோக சேவையால் உங்கள் வீட்டு வாசலில் பெற்றுக்கொள்ளங்கள்.*
- *உங்கள் கைகளை தவறாமல் கழுவுங்கள்.*
- *கோப்பைகள், கரண்டிகள் போன்ற சமையலறை பாத்திரங்கள் மற்றும் வீட்டு பொருட்களை ஒருவருக்கொருவர் பகிர்ந்து கொள்ள வேண்டாம். பயன்பாட்டிற்குப் பிறகு, இந்த பொருட்களை சலவை இயந்திரத்தில் கவனமாக கழுவவும் அல்லது சோப்பு மற்றும் தண்ணீரில் கவனமாக கழுவவும்.*
- *துவாய் அல்லது கட்டில்லுறையை ஒருவருக்கொருவர் பகிர்ந்து கொள்ள வேண்டாம்*
- *ஆபத்துக்குரியவர்கள்[3], முடிந்தால், தனிமைப்படுத்தப்பட்ட காலத்தில் மற்றவர்களிடமிருந்து பிரிக்கப்பட வேண்டும். சுய-தனிமைப்படுத்தலுக்கான வழிமுறைகளைப் பின்பற்ற வேண்டும்.*

### ***நீங்கள் தனியாக வாழ்ந்தால்***

- *நீங்கள் தனியாக வாழ்ந்தால் மளிகை பொருட்கள் மற்றும் பிற இன்றியமையாத பொருட்களை எ+கா: மருந்துகள், குடும்பத்தினர், நண்பர்கள் அல்லது விநியோக சேவையால் உங்கள் வீட்டு வாசலில் பெற்றுக்கொள்ளுங்கள்.*

**நீங்கள் மற்றவர்களுடன் ஒரே வீட்டில் வசிக்கிறீர்கள், ஆனால் பொசிடிவ் என சோதனியில் உறுதிப்படுத்தப்பட்ட நபர் அல்ல**

- நீங்கள் கதவுகளை மூடக்கூடிய அறையை தயார் படுத்தி அதில் இருந்து கொள்ள வேண்டும், அத்துடன் அறையில் உணவை எடுத்துக்கொள்ள வேண்டும்.
- சந்திப்புகள் மற்றும் தொடர்புகளைத் தவிர்க்கவும், தேவைப் பட்டால் மட்டுமே அறையை விட்டு வெளியேறுங்கள்.
- உங்கள் அறையை விட்டு வெளியேற வேண்டியிருந்தால் முகக்கவசமொன்றை அணியுங்கள்.[4].
- எல்லா அறைகளையும் ஒழுங்கான நேர இடைவெளியில் காற்றோட்டம் செய்யுங்கள்.
- உங்கள் கைகளை தவறாமல் கழுவுங்கள்.
- உங்கள் சொந்த குளியலறையைப் பயன்படுத்துங்கள். இது முடியாவிட்டால், கடைகளில் கிடைக்கக்கூடிய கிருமிநாசினியைக் கொண்டு ஒவ்வொரு பயன்பாட்டிற்கு பிறகும் (தொட்டி, மலசாலை, குழியல்தொட்டி) சுத்தம் செய்யுங்கள்.
- கோப்பைகள், கரண்டிகள் போன்ற சமையலறை பாத்திரங்கள் மற்றும் வீட்டு பொருட்களை ஒருவருக்கொருவர் பகிர்ந்து கொள்ள வேண்டாம். பயன்பாட்டிற்குப் பிறகு, இந்த பொருட்களை சலவை இயந்திரத்தில் கவனமாக கழுவவும் அல்லது சோப்பு மற்றும் தண்ணீரில் கவனமாக கழுவவும்.
- துவாய் அல்லது கட்டில்லுறையை மற்றைய நபர்களுடன் பகிர்ந்து கொள்ள வேண்டாம்.
- **நீங்கள் வீட்டை விட்டு வெளியேற வேண்டியிருந்தால்** (நோய் பரிசோதிக்க அல்லது மருத்துவரின் ஆலோசனை பெற): **நீங்கள் ஒரு முகக்கவசம் அணியுங்கள்** [5]
- **பொது போக்குவரத்தைத் தவிர்க்கவும்.** நீங்கள் ஆரோக்கியமாக இருந்தால், உங்கள் சிற்றூர்தியை அல்லது மிதிவண்டியை பயன்படுத்துங்கள், நடந்து செல்லுங்கள் அல்லது டாக்சியை அழைக்கவும்.

**முகக்கவசத்தின் சரியான பயன்பாடு**

- முகக்கவசத்தைப் போடுவதற்கு முன்பு சவக்காரம் மற்றும் தண்ணீரில் அல்லது கிருமிநாசினியைக் கொண்டு கைகளைக் கழுவவும்.
- மூக்கு மற்றும் வாயை மூடிமறைக்கும் வகையில் முகக்கவசத்தை கவனமாக வைத்து, அதை இறுக்கிக் கொள்ளுங்கள், இதனால் அது முகத்திற்கு மெதுவாக பொருந்துகிறது.
- முகக்கவசத்தைப் போட்டவுடன் அதைத் தொடாதீர்கள். பயன்படுத்தப்பட்ட முகக்கவசத்தை தொடும் ஒவ்வொரு முறையும், எ.கா. களட்டி வைத்ததும், உங்கள் கைகளை சவக்காரம் மற்றும் தண்ணீருடன் அல்லது கிருமிநாசினியுடன் கைகளை கழுவுங்கள்.
- ஒரு சுகாதார முகக்கவசத்தை 4 மணி நேரம் அணியலாம்.
- தயவு செய்து இதன் **சரியான பயன்பாடு** பற்றிய ஒழுங்குமுறைகளை www.bag.admin.ch/masks இன் கீழ் பார்க்கவும்

முகக்கவசம்

**உங்கள் ஆரோக்கியத்தை கண்காணிக்கவும்**

- உங்கள் உடல்நிலையை கண்காணிக்கவும்: உடல்நலக்குறைவு, சோர்வு, காய்ச்சல், காய்ச்சல் குணம், இருமல், தொண்டை நோய் மற்றும் மூச்சுத் திணறல் அல்லது திடீரென வாசனை மற்றும் சுவை திறனின் இழப்பு ஆகியவை புதிய கொரோனா வைரஸ் தொற்றியிருப்பதற்கான அறிகுறிகளாக இருக்கலாம்.

[4] www.bag.admin.ch/masks

[5] www.bag.admin.ch/masks

Schweizerische Eidgenossenschaft
Confédération suisse
Confederazione Svizzera
Confederaziun svizra

Swiss Confederation

சுவிஸ் கூட்டமைப்பு EDI
சுகாதாரப்பிரிவு BAG
பொது சுகாதார துறை

**அறிகுறிகள் தோன்றினால்**

- சுய தனிமைப்படுத்திக்கொண்டு சுய தனிமைக்கு வகுக்கப்பட்ட வழிமுறைகளைப் பின்பற்றவும். அனைத்து முக்கிய தகவல்களையும் நீங்கள் பின்வரும் இணைப்பின் மூலம் பெற்றுக்கொள்ளலாம் auf www.bag.admin.ch/isolation-und-quarantaene.
- சுகாதாரத்துறையின் இணையதளத்தில் கொரோனா வைரஸ் சோதனையை செய்து, முடிந்தால் மருத்துவசோதனையை செய்யவும். கன்ரோன் Waadt மாநிலத்தில் பின்வரும் இணையத்தளத்தில் https://coronavirus.unisante.ch/evaluation கோரோனா சோதனை பற்றிய விளக்கத்தை 8 **மொழிகளி**ல் காணலாம்.
- உடனடியாக ஒரு மருத்துவரை தொலைபேசியில் தொடர்புகொள்ளவும். நீங்கள் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்பட்டிருப்பதாகவும், உங்களுக்கு அறிகுறிகள் இருப்பதாகவும் அவர்களிடம் கூறுங்கள். நீங்கள் மிகவும் ஆபத்துக்குரியவராக இருந்தால், அதை முன்கூட்டியே தொலைபேசியில் மருத்துவரிடம் அறியப்படுத்தவும்.

கொரோனா வைரஸ பரிசோதனை

**சுய தனிமைப்படுத்தலின் போது சமூக தொடர்புகள்**

- நீங்கள் இப்போது தனிமைப்படுத்த வேண்டியிருந்தாம், நீங்கள் அனைத்து சமூக தொடர்புகளையும் துண்டிக்க வேண்டும் என்று அர்த்தமல்ல: தொலைபேசி, ஸ்கைப் போன்றவற்றின் மூலம் நண்பர்கள் மற்றும் குடும்பத்தினருடன் தொடர்பில் இருங்கள். உங்கள் அனுபவம், உங்கள் எண்ணங்கள் மற்றும் உணர்வுகளைப் பற்றி பேசுங்கள்.
- இது உங்களுக்குப் போதுமானதாக இல்லாவிட்டால் அல்லது இது உங்களுக்கு சாத்தியமில்லை என்றால்: உங்களுக்கு ஏதேனும் கவலைகள், அச்சங்கள் அல்லது சிக்கல்கள் இருந்தால், 143 தொலைபேசி எண்ணை அழைக்கவும் ("Dargebotene Hand"). இந்த எண்ணில் 24 மணினேரமும் இலவசமாக ஆலோசனைகள் கிடைக்கும்.
- மேலும் தகவல்கள் www.dureschnufe.ch / www.santepsy.ch / www.salutepsi.ch

*Dureschnufe* (டூறேஸ்னுபே)

**கைகளை ஒழுங்காகக் கழுவுதல்**[6]

- நீங்களும் உங்களைச் சுற்றியுள்ளவர்களும் குறைந்தது 20 விநாடிகளுக்கு சவக்காரம் மற்றும் தண்ணீரில் கைகளை தவறாமல் கழுவ வேண்டும். சவக்காரம் மற்றும் தண்ணீர் கிடைக்கவில்லை என்றால், உங்கள் கைகளை ஒரு கிருமிநாசினியால் சுத்தம் செய்து, அவை காய்ந்திருக்கும் வரை முழு கையையும் கிருமிநாசினியால் தேய்த்துக் கொள்ளுங்கள். கைகள் பார்வைக்கு அழுக்காக இருக்கும்போது சவக்காரம் மற்றும் தண்ணீர் பயன்படுத்தப்பட வேண்டும்.
- குறிப்பாக உணவு தயாரிப்பதற்கு முன்னும் பின்னும், சாப்பிடுவதற்கு முன்னும் பின்னும், கழிப்பறையைப் பயன்படுத்தியபின்னும், கைகள் அழுக்காக இருக்கும் போதெல்லாம்.

**12 வயதுக்குட்பட்ட பிள்ளைகள் மற்றும் பெற்றோர் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்பட்டிருத்தல்**

- அடிப்படியில் பிள்ளைகள் மற்றும் பெற்றோர் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்பட்டிருகையில் சாதாரண தனிமைப்படுத்தளுக்கான ஒழுங்கு விதிகள் செல்லுபடியாகும்.
- குடும்பத்துக்கு வெளியே வேறு நபர்களுடன் பிள்ளை எவ்வித தொடர்பையும் வைத்திருப்பதற்கு அனுமதி இல்லை.
- பிள்ளை சுய தனிமைப்படுத்தலில் இருப்பின், வீட்டிலுள்ள ஏனைய குடும்ப அங்கத்தவர்களுடன் இருக்கும் தொடர்பு முடியுமானவரை குறைக்கப்பட வேண்டும். எவ்வளவு தூரம் இது சாத்தியம் என்பது பிள்ளையின் வயதைப் பொறுத்து உள்ளது. பிள்ளையின் தேவைகள் கவனத்தில் எடுத்துக்கொள்ளப்பட வேண்டும், விசேடமாக சிறு பிள்ளைகளாயின்.
- சுய தனிமைப்படுத்தலில் உள்ள பிள்ளைகள் குறுகிய நேரம் புதிய காற்றை பெறுவதற்கு குடும்பத்துக்கு வெளியே உள்ள நபர்களுடன் தொடர்பு எதுவுமின்றி மேற்கொள்வது சாத்தியமாகும்.

[6] <<காணொளி சரியாகக் கை கழுவுதல் >> : https://youtu.be/gw2Ztu0H0YY

- *பெற்றோரில் ஒருவர் சுய தனிமைப்படுத்தலில் இருந்து பிள்ளை அப்படி இல்லாதிருப்பின், பிள்ளைப்பராமரிப்பு தனிமைப்படுத்தலின்பொழுது மற்றைய பெற்றோரினால் (தாய் அல்லது தந்தை) மேற்கொள்ளப்படுவதுடன் இப் பெற்றோர் பகுதி தொடர்புனபராக இருக்க வேண்டும்.*
- *இரண்டு பெற்றோரும் சுய தனிமைப்படுத்தலில் இருந்து பிள்ளை அப்படி இல்லாதிருப்பின், எவாறு நடந்து கொள்ளவேண்டுமென்பது பிள்ளையின் வயதையும் செய்யப்படக்கூடியதையும் பொறுத்து உள்ளது. பிள்ளைப்பராமரிப்பு வேறு நபர்களால் ஒழுங்கர் செய்யப்பட முடியாதிருந்து பிள்ளை சுயமாக தனது நாளாந்த விடயங்களுடன் மேலே குறிப்பிட்ட பாதுகாப்பு நடைமுறைகளை தானாகவே ஒருங்கிணைக்க முடியாதவிடத்து, பிள்ளையையும் சேர்த்து தனிமைப்படுத்தலுக்கு எடுப்பதற்கு பரிசீலிக்க வேண்டும்.*

***சுய தனிமைப்படுத்தலின் பின்னர்***

- *சுகாதார மற்றும் நடத்தை விதிகளை தொடர்ந்து பின்பற்றவும்:* http://froph-coronavirus.ch
- *உங்கள் உடல்நலத்தை தொடர்ந்து கண்காணிக்கவும். முதல் அறிகுறிகள் பிந்தியும் தோன்றும்.*

*பிரச்சாரம்*

**கொரோனா வைரஸுக்கு எதிராக மேற்கொண்ட நடவடிக்கைகளின் மூலம் ஏற்பட்ட வருவாய் இழப்பிற்கான இழப்பீடு**

- *இதுபற்றிய தகவல்களை நீங்கள் கீழுள்ள இணைப்பின் மூலம் அறிந்துகொள்ளலாம்:* www.bsv.admin.ch > Coronavirus: Massnahmen für Unternehmen, Arbeitnehmende, Selbständigerwerbende und Versicherte > Entschädigung für Erwerbsausfall > Fragen und Antworten > Entschädigung für Personen wegen einer Quarantänemassnahme.

BSV